# சூழல் சுடர்

விழிப்புணர்வு
மாசிகை

சித்திரை-1993

4

"மன்றம், 43- புகையிரத நிலையக் குறுக்கு வீதி, மட்டக்களப்பு.





மட்டக்களப்பு மாவட்டச் சூழல் மகத்துவம் விளக்கப் படவும், சூழலின்பாலாகும் தாக்கங்களை வெளிக் கொணரவும் "சூழல் விழிப்புணர்ச்சி மன்றம்" இவ்விதழை மாதம் ஒரு முறை விரிக்கிறது.

## நாம் வாழும் சூழலும், நாமும்

## இயற்கை அன்னையின் பிள்ளைகள் பிரிந்து வாழாமல் இணைந்தே வாழ்வோம்

### சுற்றுச் சூழலின் அம்சங்கள்

தொகுப்பு :- யோ. இ. கிறிஸ்தோபர்




சுற்றுச் சூழல் பலவிதமான உயிரற்ற, உயிருள்ள அம்சங்களை உள்ளடக்கியதாக இருக்கின்றது. மேலே இருக்கும் படத்தில் சாதாரணமாக நிலத்தில் காணப்படும் உயிரற்ற, உயிருள்ள அம்சங்களைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

சுற்றுச் சூழலில் உள்ள உயிரற்ற அம்சங்கள் யாதெனப் பார்ப்போமாகில் அவை, பௌதிக இயல்புகளைக் கொண்ட சூரிய ஒளி, நிழல், வீழ்ப்படிவு, வளி, நிலப்பரப்பு, வெப்பம், நீரோட்டம் என்பனவும் இரசாயன இயல்புகளைக் கொண்ட வளி மண்டலத்திலும், நீர் மண்டலத்திலும், நில மண்டலத்திலும் உள்ள உயிர் வாழ்வதற்கு உதவுவனவான மூலகங்களும் கூட்டுப் பொருட்களுமாகும்.

வலுவளத்தின் அடிப்படையிலும், சக்தி பெறப்படும் மூலகத்தின் அடிப்படையிலும் சுற்றுச் சூழலில் இருக்கும் வித விதமான தாவர விலங்கினக் கூறுகளை, உற்பத்தியாக்கி, நுகரி, நொதியங்கள் என்று மூன்று வர்க்கங்களாகப் பிரிக்கலாம்.

உற்பத்தியாக்கிகள் :- தாவரங்கள் தங்களின் உணவைத் தாங்களே தயாரிப்பதால் இவைகள் உற்பத்தியாக்கிகள் ஆகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தொடர்ச்சி....7

ஏழல் அவியினரின் மாதாந்தக் கூட்டம்

9. ஏழல் அவியினரின் சித்திரை மாதக் கூட்ட அறிக்கை.

128. ஏழல் அவியினரின் சித்திரை மாதக் கூட்டம் 3ஆந் திகதி சனிக்கிழமை மன்று நிறுவன கேட்போர் கூடத் தில் மன்று நிறுவன இணைப்பாளர் திரு. யோ.இ. கிறிஸ்தோபர் அவர்களின் தலைமையில் நடைபெற் றது. வழமைபோல் ஒரு நிமிட மௌன அஞ்சலியுடன் கூட்டம் ஆரம்பமானது.

129. சித்திரை மாதக் கூட்டத்தில் பின்வரும் பாடசாலை ஆசிரியரும், மாணவ மாணவியரும், கழக உறுப்பி னர்களும் கலந்து கொண்டனர்.

1. மட்/தாழங்குடா ஸ்ரீ விநாயகர் வித்தியாலயம்,

   வி. கலைச்செல்வி   பி. மனோன்மணி   பி. சசிகலாதேவி   ஏ. வளர்மதி

2. மட்/கருதாவளை மகா வித்தியாலயம்,

   ரி. நித்தியானந்தன்   ஏ. இதயராதன்   பி. அமிர்தராஜா   ரி. ஸ்ரீகுமாரி

3. மட்/சிவானந்தா வித்தியாலயம்,

   ஜி. சிறிதரன்

4. மட்/இந்துக் கல்லூரி,

   ஆசிரியர் திரு. எஸ். பிரேமானந்தன்

   எஸ். சிவரூபன்

5. மட்/கருவக்கேணி விவேகானந்தா வித்தியாலயம்,

   ஏ. சுரேஷ்பாபு   எஸ். சிவாகரன்

6. சித்தாண்டி இளைஞர் கழகம்,

   எஸ்.டி. முரளிதரன்

7. உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனம்,

   பி. சந்திரவதி

130. சென்ற மாதக் கூட்ட அறிக்கை வாசிக்கப்பட்டது.

131. பாடசாலைகளிலும் கழகங்களிலும் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள், அவற்றிற்குள்ள தடைகள் ஆகியன பற்றி ஆராயப்பட்டன.

132. மட்/இந்துக் கல்லூரி,

1. மா, தேசிக் கன்றுகள் வளர்ந்துள்ளன.
2. வீதியில் பூங்கா அமைக்கும் திட்டத்தின் முதற் கட்டமாக பாடசாலை வளாகத்திலுள் பூங்கா ஒன்று அமைப்பதற்கு எடுத்த முயற்சியும் கட்டாக்காலி பிராணிகளின் தொல்லையினால் சாத்தியமற்றதாகி விட்டது. இந்த நிலைமையில் வீதியில் பூங்கா எப்படி அமைக்க முடியுமென்று அங்கலாய்த்தனர். ஜனாதிபதி நடமாடும் சேவையின் நிமித்தமாக பாடசாலை வளாகத்தினுள் கிறவல் நிரப்ப நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வேலை பூர்த்தியானதும் பூங்கா அமைக்கும் முயற்சி ஆரம்பிக்கப் படும்.

133. மட்/கருவக்கேணி விவேகானந்தா வித்தியாலயம்,

1. மைதானத்தைச் சுற்றி சுத்தாக் கன்றுகளை நாட்டியுள்ளனர்.
2. வாழைக்கன்றுகளை நாட்டியுள்ளனர்.
3. பாடசாலையைச் சுற்றி மரக்கன்றுகளை நாட்டியுள்ளனர்.
4. விக்ஸ் விதைகள் தேவையென்று தெரிவித்தனர்.

134. மட்/தாழங்குடா ஸ்ரீ விநாயகர் வித்தியாலயம்,

1. விக்ஸ் கன்றுகளும் அசோக் கன்றுகளும் இலவசமாக வழங்கப்பட்டன. கிராம மட்டத்தில் மரக் கன்றுகளை உற்பத்தி செய்து விற்பனை செய்வது மிகவும் கடினமான காரியமென்று கூறினார்கள். ஆகவே, அவற்றை இலவசமாக வழங்கியதாகவும் தெரிவித்தனர்.

135. மட்/கருதாவளை மகா வித்தியாலயம்,

1. விக்ஸ் கன்றுகள் விற்பனைக்கு உண்டு என்று தெரிவித்தனர்.

136. மட்/சிவானந்தா வித்தியாலயம்,

1. பூமரக்கன்றுகள் நன்றாக வளர்ந்துள்ளதாகத் தெரிவித்தனர்.

137. சித்தாண்டி இளைஞர் கழகம்,

1. சுமார் 150 அத்கேசியா (வேல் மரம்) இனத் தாவரங்களை பொதுஜன அபிவிருத்தி மன்றத்து டன் இணைந்து சித்தாண்டி விநாயகபுரத்திலுள்ள விநாயகர் கோயிலைச் சுற்றி நாட்டியுள்ளனர்.

138. சிவப்பு விதைகள், புளி விதைகள், நாவல் விதைகள், களா விதைகள் மற்றும் பழ மர விதைகளைச் சேகரிக்குமாறு ஏழல் அவியினரிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ச்சி...3

# கவிதைச் சுடர்

## வீட்டுக்கொரு மரக்கன்று

நாமிருக்கும் நாடு நமது
    என்பதறிந்த பின்
நாமிருக்கும் சூழல் நமது
    என்பதை அறிந்திடுக.

போட்டியிட்டுக் காடழிக்கும்
    சுற்காலமும் இருந்ததன்று
நாளைய சந்ததி நிலையெண்ணி
    நானிலம் ஏனோ நடக்கவில்லை.

ஓரிரு தசாப்தங்கள் உருண்ட பின்னே
    இயற்கையில் வனங்கள் இல்லையன்றோ
ஏனெனில் எனக்கிந்தச் சந்தேகம்
    காடழிப்பில் கயவர்கள் கடுவேகம்.

இயற்கையின் சீற்றம் எழுபத்தியெட்டில்
    இன்னும் பற்பல விளைவுகளால்
இந்து மாகடலின் நித்திலத்தே
    இயற்கையின் வனப்பு மாறியதே.

அடுப்பில் விறகாய் நிதமும் எரிக்கவும்
    அழகுற வீட்டின் அமைப்பினை ஆக்கவும்
தெருக்களில் மின்னைச் சீராய்க் கொடுக்கவும்
    மதிப்பிட முடியா மரங்களின் தேவை.

நாட்டின் வளத்தில் பெரும்பங்கு
    இந்தக் காடு, செடிகள் அறிவீரோ
வீட்டின் சூழல் முதற்கொண்டு
    விரைவாய் நாட்டைக் காத்திடுவீர்.

வீட்டுக்கொரு மரக்கன்றை
    வீரியமாக வளர்க்கையிலே
பாட்டினாலே பொருளுரைத்த
    பையனின் ஞாபகம் வருமன்றோ.

ஆக்கம் :- பொ. பேரின்பம்,
சித்தாண்டி இளைஞர் கழகம்.

---

சூழல் அணியினரின் மாதாந்தக் கூட்டத் தொடர்..

## சின்னம் பழ மரம்

சின்னம் பழங்களைத் தற்பொழுது இலகுவில் சேகரிக்க முடியுமென்று கல்லடி உப்போடை ... சுதாவளை மகா வித்தியாலய மாணவர்களும் இந்துக் கல்லூரி மாணவரும் கூறிய தையடுத்து மட்டக்களப்பு மாவட்டத்தில் அழிவுற்றுக் கொண்டிருக்கும் சின்ன மரத்தினை மீள நாட்டும் முயற்சியாக சின்னம் விதைகளைச் சேகரித்து அதனைப் பதியமிடுவது என்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. இதற்கு உதவியாக "மன்று" இணைப்பாளர் காட்டிலாகா உதவியுடன் விதைகள் பதியமிடும் முறையைச் செயற்படுத்துவதாகக் கூறினார்.

139. மட்டக்களப்பு மாவட்டத்தில் இருக்கும் நீர் நிலைகளிலுள்ள கண்ணாக்காடுகள் பெரும்பாலும் அழிக்கப்பட்டு விட்டன. இதனை அழிந்த இடங்களில் மீள நாட்டி வாவிக்கரையோரங்களில் மீனினங்களும் வேறு உயிரினங்களும் பெருகுவதற்கு ஏற்ற சுற்றாடலை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனக் கூறப்பட்டது. அத்துடன் இம் மீள் நடுகைத் திட்டங்களில் கலந்து கொள்ள சகலருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. இம் மீள் நடுகைக்குத் தேவையான முளைகளைப் பெறுவதற்கு காட்டிலாகாவினருடன் தொடர்பு கொள்ளப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டது.

140. கிராமோதயத் தலைவர்களுக்கு நடைபெற்ற கருத்தரங்கு பற்றியும் கூறப்பட்டது. அக் கருத்தரங்கில் ஆராயப்பட்ட விடயங்கள், பிரச்சினைகள், அவற்றிற்கெடுக்கப்பட்ட முடிவுகள் ஆகியன பற்றி இணைப்பாளர் விளக்கமாகத் தெரிவித்தார்.

141. சூழல் தினப் போட்டிகள் சம்பந்தமான அறிவித்தலும் வாசிக்கப்பட்டது. இப் போட்டிக்கு இது வரை பாடசாலைகளில் இருந்து விண்ணப்பங்கள் வந்து சேரவில்லை என்றும் எடுத்துக் கூறப்பட்டது.

142. "சூழல் சுடரு"க்குரிய ஆக்கங்களை ஒரு வாரத்திற்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. கழிவுப் பொருட்களின் மீள் சுழற்றி பற்றிய கட்டுரைகள் வரவேற்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

143. நண்டுகளுக்குக் கடும் கிராக்கி மட்டக்களப்பு மாவட்டத்திலும், வெளி மாவட்டங்களிலும் நிலவுகின்றதென்பது, எல்லோராலும் அறியப்பட்ட ஒன்றாகும். ஆனால் பிடிக்கப்படும் நண்டுகள் எல்லாம் நிறை உள்ளதாக இல்லாததனால் நிறை குறைந்த நண்டுகளை (தண்ணீர் நண்டுகள்) கூண்டுகளில் நீரிலுள் வைத்து வளர்த்து அவைகளின் நிறை அதிகரித்ததும் கூடிய விலையில் விற்பதற்காக இந் நண்டுகளை பரீட்சார்த்தமாக கூடுகளில் வைத்து வளர்ப்பது தொடர்பான ஆராய்ச்சியொன்று "மன்று" நிறுவனத்தினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தற்பொழுது தன்னாமுனையில் நடைமுறைப்படுத்தப்பட்டுக்கொண்டு வருகின்றது என்பதனை இணைப்பாளர் விளக்கிக் கூறினார். இவ் ஆராய்ச்சி முயற்சியில் ஈடுபட விரும்பும் சகலரையும் "மன்று" நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளும்படி அழைப்பு விடுக்கப்பட்டது.

144. சித்திரை விடுமுறையில் பாடசாலைகள் மேற்கொள்ளவிருக்கும் திட்டங்களாகப் பின்வருவனவற்றைக் கூறினர்.

1. சுதாவளை மகா வித்தியாலயம்,
    1. கடற்கரையோர மீனாட்சி அம்மன் கோயிலில் நாட்டியுள்ள கன்றுகளோடு அலரிக் கன்றுகளையும் நாட்டவுள்ளனர்.
    2. மைதானத்தைச் சுற்றிக் கன்றுகளை நாட்டவுள்ளனர்.
2. இந்துக் கல்லூரி,
    1. பாடசாலை வளாகத்திலுள்ள கோயிலைச் சுற்றிப் பூக்கன்றுகளை நாட்டவுள்ளனர்.

145. எமது அடுத்த மாதாந்தக் கூட்டம் வைகாசி மாதம் 8ஆந் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு "மன்று" நிறுவனக் கேட்போர் கூடத்தில் நடைபெறும் எனவும் முடிவு செய்யப்பட்டது.

சூழல் அணியினர் அனைவரையும் கூட்டத்திற்கு சமுகம் அளிக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இன்றைய பாடம்

## தாவரங்களின் விசித்திரமான வித்துப் பரம்பல்

தொடர்.....

4. தெங்கு :-

இதன் தாவரவியற் பெயர் -
கொக்கொஸ் நியூசிபெரா




இது நீரால் பரம்பலடைவதற்கென இசைவாக்கமடைந்த பழமாகும். இதற்காக இதன் இடைக்கனியமானது நார்களால் ஆக்கப்பட்டு காற்றினால் நிரப்பப்பட்டுள்ளது. இந்த இடைக்கனியமும் கற்கலங்களால் ஆன வன்மையான உட்கனியமும் இணைந்து வித்துக்களைப் பாதுகாப்பதற்கு உதவுகின்றன. இப்பழமானது (தேங்காய்) நீர் நிலைகளில் விழும் பொழுது மிதந்து சென்று தனக்குத் தேவையான சூழற் காரணிகள் (நீர், காற்று, சூரிய ஒளி) கிடைக்கும் பொழுது முளைக்கத் தொடங்கும் அல்லது உயரமான மரத்தில் இருந்து தரையில் விழும் பொழுது தூர இடத்திற்கு உருண்டு சென்று முளைக்கத் தொடங்கும்.

5. பூனை விராண்டி :-





இதன் தாவரவியற் பெயர் -
மார்ட்டீனியா

இத் தாவரத்தின் பழங்கள் நுனியில் கொளுக்கிப் போன்ற அமைப்பைக் கொண்டுள்ளதனால் விலங்குகள் நடமாடும்போது அவற்றின் உடலில் மாட்டிக் கொள்கின்றன. பின் தூர இடங்களில் விழுந்து சூழற் காரணிகள் (நீர், காற்று, சூரிய ஒளி) கிடைக்கும்போது தனது உறங்கு நிலையைக் கலைத்து முளைக்கத் தொடங்கும்.

6. முருங்கை :-


இதன் தாவரவியற் பெயர் -
மொரிங்கா ஒலிபெரா




இவற்றின் வித்துக்கள் பாரமற்ற செட்டைகளைக் கொண்டிருப்பதனால் இச் செட்டைகளின் பரப்பை காற்றின் மேலுக்க விசை தாக்கும்போது இவை எளிதாகக் காற்றில் மிதந்து தாய் மரத்திற்கு அப்பால் கொண்டு செல்லப்படுகின்றன. பின் இவ் வித்து தனக்குத் தேவையான சூழற் காரணிகள் அதாவது நீர், காற்று, சூரிய ஒளி முதலியன கிடைக்கும் பொழுது முளைக்கத் தொடங்கும்

7. மாமரம் :-

இதன் தாவரவியற் பெயர் -
மங்கிபெரா இண்டிக்கா




இத் தாவரத்தின் பழத்தின் இடைக்கனியமும் வெளிக்கனியமும் நிறம், மணம், சுவை என்பவற்றைக் கொண்டிருப்பதால் இவை விலங்குகளால் கவரப்படுகின்றன. அவ்வாறு அவை கவரப்படுவதால் வேறு இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு உண்ணப்பட்ட பின் அவ்விடத்திலேயே விட்டுச் செல்லப்படுகின்றன. பின் இவ் வித்தானது காற்று, நீர், சூரிய ஒளி முதலிய சூழற் காரணிகள் கிடைக்கும் பொழுது தனது உறங்கு நிலையைக் கலைத்து முளைக்கத் தொடங்கும்.

தொகுப்பு :- க. சத்தியானந்தன்,
சித்தாண்டி இளைஞர் கழகம்.

---

## தாவரங்கள் தம் உயிர் காக்க

### இசைவாக்கம்

இன்று உலகில் பல வகைத் தாவரங்கள் பல்வேறு வகையான காலநிலைகளையுடைய பிரதேசங்களில் இருக்கின்றன. அக் காலநிலைக்கேற்ப இசைவாக்கம் அடைந்து அக் காலநிலைக்கேற்ப அப் பிரதேசங்களில் அத் தாவரங்கள் உயிர் வாழ்கின்றன. இவ்வாறாக வெப்பநிலை கூடிய பிரதேசத்தில் வாழ்கின்ற தாவரங்களுக்கு நீர் கிடைப்பது அரிதாகும். கிடைக்கும் நீரைக் கொண்டு உயிர் வாழ்தல் வேண்டும். அவ்வாறு கிடைக்கும் நீர் ஆவியுயிர்ப்பின் மூலம் இழக்கப்படுதல் தடை செய்யப்பட வேண்டும். இவ்வாறு ஆவியுயிர்ப்பிலிருந்து விடுதலை பெற (அதாவது ஆவியுயிர்ப்பைக் குறைக்க) அத்தாவரங்கள் விசேட இசைவாக்கம் அடைந்துள்ளன.


ஆவியுயிர்ப்பு என்றால் நீரானது வெப்பத்தினால் நீராவியாக மாறுதலாகும். தாவரங்களில் இலையின் கீழ்ப்புறமுள்ள இலைவாயில் (இலையின் மேற்புறம் ஒரு

தொடர்ச்சி..5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...றுவகள் .... 4ம் பக்கத் தொடர் .....

சில இலைவாய்கள் உண்டு. அத்துடன் நீரின்மேல் மிதக்கும் தாவரங்களுக்கு இலைவாய்கள் மேலே உண்டு) ஊடாகவே நீர் நீராவியாக இலையிலிருந்து வெளியேறுகின்றது. கீழே படத்தில் இலையில் இலைவாய் அமைந்துள்ள முறை காட்டப்படுகின்றது.




இவ்வாறு இலைவாயிலிருந்து நீர் நீராவியாதலைத் தடுக்கத் தாவரங்கள் பின்வரும் இசைவாக்கங்களைக் கொண்டுள்ளன.

1. இலைகள் உதிர்தலும் இலைகள் குறைவாகக் காணப்படுதலும். உ-ம் - கள்ளி.
2. இலைவாய்கள் மேற்றோலுக்குக் கீழே அமிழ்ந்து காணப்படுதல். உ-ம் - மருப்பனை.
3. இலைவாய்கள் குழிகளில் அமைந்திருத்தல். உ-ம் - அலரி.
4. சில தாவரங்களின் இலைகள் தடிப்பாகவும் பளபளப்பாகவும் காணப்படல். உ-ம் - பசளி.
5. சில தாவரங்களில் நீர் பாலாக மாறுகின்றமை. உ-ம் - அலரி.
6. சில தாவரங்களில் நீர் சளியமாகக் காணப்படல். உ-ம் - இறைச்சிக்கறைச்சான்.

ஆக்கம் :- எஸ். சிவரூபன்,
மட்/இந்துக் கல்லூரி.

---

## பனை வளம்

இலங்கையின் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களின் இயற்கைச் செல்வமாகப் பனை வளம் காணப்படுகின்றது. ஏனைய பயிர்களைப் போல பனைக்கு நீர் வசதி, பசளை, பாதுகாப்பு போன்ற எந்த வசதியும் தேவையில்லை. பனை மரங்கள் தரை நிலங்களிலும், காடுகளிலும் நன்கு வளர்ந்து காணப்படுகின்றது. இலங்கையின் இயற்கை மூலவளமாகவும், கற்பக விருட்சமாகவும் இது காணப்படுகின்றது. பனை மரத்தின் வேரிலிருந்து குருத்தோலை வரையுள்ள பாகங்கள் யாவும் பற்பல விதமாகப் பயன் தரக்கூடியவை. இலங்கையின் விலையுயர்ந்த கொடையாகப் பனை வளம் காணப்படுகின்றது. பனை வளத்தை நமது நாட்டு மக்கள் அக்கறையின்றி வெட்டிச் சாய்த்து அதன் வளத்தைக் குறைத்து விடுகின்றார்கள். பனைமரத்தை மீண்டும் உண்டாக்குவதற்கு அக்கறை எடுப்பதில்லை. இதனால் இயற்கையான பனை வளத்தினை ஈடு செய்ய முடியாத இழப்பு ஏற்படுகின்றது. பருவ கால மழை பெய்யும் வாய்ப்பு குறைகின்றது. இதன் காரணமாக சூழல் பாதிக்கப்படுகின்றது. வரண்ட வலயப் பொருளாதாரத்தில் பனை உயர்ந்த வரப்பிரசாதமாகக் காணப்படுவதோடு கடவுளின் கொடையாகவும் உள்ளது எனக் கூறலாம். மக்களுக்கு மிகக் கூடிய அளவு உபயோகப்படும் பொருட்களைத் தரும் மூலப்பொருளாகவும் இது காணப்படுகின்றது. இயற்கையின் கற்பகதருவாகிய பனை மரம் எமக்கு வேண்டியவற்றை எல்லாம் ஆண்டு முழுவதும் தருகின்றது.

பனை மரத்தினை வீட்டுக் கூரைக்கு கைமரமாகப் பயன்படுத்தலாம். மனிதனின் அடிப்படைத் தேவை மூன்றில் மிக முக்கியத் தேவையாகிய உறைவிடத்திற்கு இது உபயோகப்படுகின்றது. எரி பொருளாகவும் இதனைப் பயன்படுத்தலாம். நொங்கு மக்களுக்குத் தாகம் தீர்ப்பதோடு பல நோய்களைத் தீர்க்கும் தன்மை கொண்டமையால் அரிய மருந்தாகவும் பயன் படும். பனம் பழத்தைப் பதமாக நெருப்பில் வாட்டிப் பிழிந்து சோறுடன் சேர்த்துச் சாப்பிடலாம். அதுமட்டுமல்லாது பலகாரம், பனாட்டு முதலியனவும் செய்யலாம். பனம் பழத்தின் சாற்றில் குடிவகைகளும் செய்யலாம். ஊமலை எரிபொருளாகப் பயன்படுத்தலாம். பனங்கிழங்கில் ஒடியல், ஒடியல்மா தயாரிக்கலாம். இதனைக் கொண்டு தயாரிக்கப்படும் கூழ் ஒரு சமூக உணவாகும். ஒடியல் மாவுடன் தேங்காய், சர்க்கரை சேர்த்துச் சாப்பிடுவது பழங்கால வழக்கம். ஒடியல் மாவில் தயாரிக்கப்படும் பிட்டு ஏழைகளின் பசி தீர்க்கும் உணவாகும். பனங்குருத்தோலையைக் கொண்டு வீட்டு உபயோகப் பொருட்கள், பாய், கடகம், நீற்றுப்பெட்டி, கூடை, அடுக்குப்பெட்டி, மூடல்பெட்டி, குட்டான், விசிறி மாலை, அலங்காரப் பொருட்கள், சிறுவருக்குரிய விளையாட்டுப் பொருட்கள், தொப்பி வகைகள் முதலியன செய்யலாம். ஈர்க்குகளைக் கொண்டு சுளகு, தட்டு, திருகாலி, துடைப்பம், உறி, கூடை, அலங்காரப் பொருட்கள் முதலியன செய்யலாம். வறுமையில் வாடும் மக்களுக்கு வருமானத்தைக் கொடுக்கக்கூடிய வகையில் பனை வளம் இருக்கின்றது. வீட்டில் இருக்கும் பெண்கள் கூட தமது ஓய்வு நேரத்தில் இந்த வேலைகளைச் செய்யலாம். பனை வளம் பெருகினால் தொழில் வளம் பெருகும். நாட்டின் பிரச்சினை காரணமாகவும் எவ்வளவோ பனைகள் அழிந்து விட்டன. இதன் அழிவுகளைத் தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதாகவும் தெரியவில்லை. இந்தப் பனைகளை மீளப் பெறுவதற்கு ஒவ்வொருவரும் ஒரு பனை மரம் நாட்டுங்கள். இவ்வாறு ஒரு பகுதியில் மரங்கள் அழிக்கப்பட்டு வரும் வேளையில் மறு பகுதியில் மரங்கள் உருவாக்கப்பட்டு வருவதால் சூழல் பாதிப்பும் குறைவடையும். பனை வளத்தின் தேவை மக்களுக்கு முக்கியமானதாகக் காணப்படுகின்றது. ஆகவே,

"பனையை வளர்ப்போம்
பயனைப் பெறுவோம்."

ஆக்கம் :- பி. சந்திரவதி,
உழைக்கும் மகளிர் அபிவிருத்தி
நிறுவனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்புகள்

* திரு.கு. சண்முகம், (ஆசிரியர்),
வந்தாறுமூலை.

நான் தொடர்ந்து "ஏழல் சுடர்" சஞ்சிகையைப் பெற்றுப் பயனடைய விரும்புகின்றேன். எனவே, மாதந்தோறும் இச் சஞ்சிகையைத் தொடர்ந்து அனுப்பி வைக்குமாறு வேண்டுகின்றேன்.

* திட்ட இணைப்பாளர்,
கிழக்கிலங்கைப் புனர்வாழ்வுக் கழகம்.

தங்களது "ஏழல் சுடர்" பிரதிகளைத் தொடர்ந்தும் எங்களுக்கு அனுப்புவதை நாங்கள் வெகுவாக விரும்புகின்றோம்.

* திரு.க.கனகராசா, ஜே.பி.,
உரிமையாளர்,
மில்க்வைற் சவர்க்காரத் தொழிற்சாலை.

"ஏழல் சுடர்" 2 மாசி இதழ் கிடைக்கப் பெற்றோம். "ஏழல் விழிப்புணர்ச்சி மன்றம்" ஒன்றமைத்து ஏழல் கேடுறுதலால் விளையும் அநர்த்தங்களை ஊரறிய, நாடறிய உலகெங்கும் அறிய அரும் பணி ஆற்றி வருவது அறிந்தோம், மகிழ்ந்தோம். "ஏழல் சுடர்" ஒரு மாணவர் முயற்சி போலவும் எமக்குத் தெரிகிறது. அதுவேயாயின் எமது மகிழ்ச்சி பெருவகையாக மாறிவிடும். ஒவ்வொரு கட்டுரையும் ஆழமாகவும் பொருள் பொதிந்ததாகவும் அமைந்துள்ளது. மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவில் நடாத்திய வீட்டுத் தோட்டப் போட்டியில் (1992/93) 232 போட்டியாளர்கள் கலந்து கொண்டார்கள் என்பதே ஒரு சாதனை. "ஏழல் சுடர்" எமக்குத் தொடர்ந்து கிடைக்கத்தக்கதாகப் பதிந்து கொள்ள வேண்டுகிறோம்.

* திரு.எஸ்.பிரணவசோதி, ஜே.பி.,
தலைவர், கிராமோதய சபை,
பெரிய கல்லாறு.

தங்களது "ஏழல் சுடர்" பங்குனி 1993 மாசிகை கிடைக்கப்பெற்றேன். இதன் முன்னைய வெளியீடுகள் பெறமுடியுமாயின் தந்துதவினால் நலம். தொடர்ந்தும் பெறுவதற்கு விரும்புகின்றேன். உரிய விபரங்களை அறியுங்கள். பின்வரும் விடயங்களைத் தங்களது கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

1. தெருவோர மரநடுகைத் திட்டங்களின்போது மின்சார சபையின் ஆலோசனைகளைப் பெறுதல்.
2. எங்கள் கிராமத்திற்குப் பொருத்தமான மரநடுகைத் திட்டங்களை மேற்கொள்ளத் தங்களது பிரதிநிதிகள் எங்கள் கிராமத்திற்கு வருகை தரல் வேண்டும்.
3. வைத்தியசாலைக் கழிவுகளை சுகாதார ரீதியாக அகற்ற நடவடிக்கை எடுத்தல்.
4. நாற்றுமேடைத் திட்டத்திற்கு உதவி.

* திரு.கே.தட்சணாமூர்த்தி, விரிவுரையாளர்,
கிழக்குப் பல்கலைக்கழகம், வந்தாறுமூலை.

தங்களது "ஏழல் சுடர்" சஞ்சிகை ஒன்றை வாசித்தேன். தங்கள் முயற்சிக்கு எனது வாழ்த்துக்கள். இதன் பிரதிகளை மாதந்தோறும் பெற விரும்புகிறேன். சில கட்டுரைகள் எழுதலாமென்றும் நினைக்கிறேன். தயவுசெய்து "ஏழல் சுடர்" பிரதிகளுக்கு எனது பெயரையும் பதிந்து கொள்ளுங்கள்.

* திரு.ஏ.எச்.அப்துல்கபூர், ஜே.பி.,
தலைவர், கிராமோதய சபை,
புதிய காத்தான்குடி (மேற்கு).

"ஏழல் சுடர்" மாதாந்த வெளியீட்டினைத் தொடர்ந்தும் பெற விரும்புகின்றேன். அதற்கான விபரங்கள் அனைத்தையும் தந்துதவுமாறு வேண்டுகிறேன்.

வளருங்கள் எங்களை
வளர்க்கின்றேன் உங்களை

எங்களினம் உங்களை விட எண்ணிக்கையில் அதிகம் தான். ஆகவேதான் நாங்களும் கவலையற்று வாழ்ந்து உங்களுக்கு வாரி வழங்கி வளமும் பயனும் அளித்தோம். பார்த்த இடமெல்லாம் பச்சைப்பசேலென்று காட்சியளித்தோம். எமது கழிவுகளைத் தந்து உங்கள் செய்பயிர்களுக்கு செழிப்பையூட்டி விளைச்சலை அதிகரிக்கச் செய்தோம். காற்றையும் முகிலையும் குளிரச்செய்து மழை வளம் தந்தோம். கொடிய வறட்சியை எதிர்த்துப் போரிட்டு உங்களைக் காத்தோம்.

நூற்றுக்கணக்கான வயதையடைந்தும் செழுமை குன்றாது செழிப்புடன் வளர்ந்து வளமூட்டிய எங்களைக் கோடரி கொண்டு வெட்டிச் சாய்த்தீர்கள். இப்போது தான் எங்களின் மகிமையை உங்களில் சிலர் உணர்ந்துள்ளீர்கள். எங்கள் பயனை அறியாது சிலர் எங்களை அழிக்கும் நடவடிக்கையில் தொடர்ந்தும் ஈடுபடுவதையிட்டு நாங்கள் வேதனை அடைகிறோம். நாங்கள் அழிவதையிட்டு சிறிதும் நாங்கள் கவலைப்படவில்லை. நீங்கள் அனுபவிக்கப்போகும் துயரங்களை, உங்கள் ஏழலின் எதிர்காலத்தையிட்டுக் கவலையடைகிறோம்.

அன்பான மனிதர்களே! சற்று சிந்தித்துப் பாருங்கள். குளுகுளுப்பாக இருந்த உங்கள் வீடு, வளாகம், தோட்டம் என்பன ஒரே வெப்பத்தால் வறண்டு போய்க் கிடக்கின்றன. பத்து வருடங்களுக்கு முன், உங்கள் முற்றத்திலே அமைந்திருக்கும் கிணறு வற்றாத ஊற்றாக நீரைப் பெருக்கிக் கொண்டிருந்தது. இப்போது ஆனி மாதத்திலே வற்றி வறண்டு விடுகின்றது. குடிக்கக் கூட நீரில்லாமல் நீங்கள் கஷ்டப்படுகிறீர்கள். வீதியோரங்களில் பரந்து, வளர்ந்து நீங்கள் தரித்து நின்று ஆறிச் செல்ல உதவிய எமது சகோதரர்கள் இன்று இல்லை. அன்று அவர்களை அழித்ததும் நீங்கள்தான், இன்று கொளுத்தும் வெயிலின் அகோரம் தாங்கமுடியாது தவிப்பதும் நீங்கள்தான்.

தொடர்ச்சி..7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றுச் சூழலின் அம்சங்கள்

1ம் பக்கத் தொடர்....

நுகரி :- விலங்கினங்கள் யாவும் நுகரிகளாகக் கணிக்கப்படுகின்றன. இவைகளை மூன்று விதங்களாகப் பிரிக்கலாம்.

1. தாவர உண்ணிகள்
2. ஊனுண்ணிகள்
3. தாவர, ஊன் உண்ணிகள்

நொதியங்கள் :- பங்கசு, பக்டீரியா போன்ற நுண்ணுயிர்கள் இறந்த பொருட்களை நொதிக்கச் செய்வதால் போசணைகள் நிலத்தைச் சென்றடையச் செய்கின்றன.

நொதியங்களின் பணி - உயிர் வாழ்வதற்குத் தேவையான போசணைகளை உயிர்க்கூறுகளிலுள்ள இரசாயப் பொருட்களில் இருந்து மீள் சுழற்சிக்கு ஏற்றதாகச் சிதைத்து நிலத்திற்கும், நீருக்கும், வளிக்கும் கொடுப்பதேயாகும். இச் செயல் வஸ்துக்களின் சுழற்சி வட்டத்தை முற்றுப் பெறச் செய்கின்றது.

உயிர் வாழ்வதற்குத் தேவையான எல்லா விதமான இரசாயன போசாக்குகள் உயிர்மண்டலத்தில் அனேகமாக முற்றுமுழுதாக சுழற்சிக்கு உட்படுத்தப்படுகின்ற போதிலும் ஒரு மண்டலமாவது தனித்த தன்னகத்தே உள்ள இரசாயனங்களை முற்றுமுழுதாக மீள் சுழற்றுவதில்லை. உதாரணமாகக் கூறப்போனால் வளர்ந்த மரங்கள் நிறைந்த காடுகள் அனேகமான போசணைகளை மீள் சுழற்றும்போது திறந்த வயல்கள் ஒரு பகுதியையே மீள் சுழற்றுகின்றன. ஆகவே, தங்களுக்குத் தேவையான மேலதிக மூலகங்களையும், கூட்டுப் பொருட்களையும் வேறு மண்டலங்களிலிருந்து எடுக்க வேண்டியிருக்கிறது.

இதிலிருந்து உயிர் வாழ்வதற்கு, ஒவ்வொரு மண்டலமும் ஒன்றில் ஒன்று தங்கியுள்ளது என்பது புலனாகின்றது.

உசாத்துணை :- Environmental Science - G. Tyler Miller J.R.

வளருங்கள்.... 6ம் பக்கத் தொடர்.....

உங்கள் கவனக் குறைவாலே எங்களை அழித்ததன் பயனை இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கின்றீர்கள். பருவ காலங்கள் தலைகீழாக மாறிவிட்டன. மழை வேண்டிய காலத்திலோ பனி பெய்கிறது. நீர் பாய்ந்து ஓட வேண்டிய வாய்க்கால் வற்றிக் காய்ந்துபோய்க் கிடக்கின்றது. செய்யும் பயிர்கள் அன்னத்தம் செத்து மடிகின்றன.

எனவே, உங்கள் நலனுக்காகவும், உங்கள் சூழலினை வளப்படுத்தவும், உங்கள் எதிர் காலச் சந்ததியினரினது வளமான வாழ்விற்கு வழியமைக்கும் முகமாகவும் இன்றே எனது இனத்தவன் ஒருவனை உங்கள் வீட்டுக்கருகில் நாட்டுங்கள். நீருற்றிப் பாதுகாத்து வளருங்கள் எங்களை, சகல வளமும் தந்து வளர்க்கிறேன் உங்களை.

ஆக்கம் :- வீ. மஞ்சுளாதேவி,
மட்/கருவன்கேணி வி.வி..


வெளியீட்டுக் குழு

சுடரின் தூண்டுகோல் :-
மனோ இராஜசிங்கம்
யோ.இ.கிறிஸ்தோபர் } மன்று

நெறிப்படுத்துனர் குழு :-
க. லீலா
றெ. விமலா
அ. யோகராணி } மன்று

ஆசிரியர் குழு :-

எஸ். சிவரூபன் - இந்துக் கல்லூரி
வி. கலைச்செல்வி - தாழங்குடா ஸ்ரீ வி.வி.
வீ. முரளீதரன் - செங்கலடி ம.வி.
கே. ஜெயக்குமார் - கருதாவளை ம.வி.
க. சத்தியானந்தன் - சித்தாண்டி இ.க.
பி. சந்திரவதி - உழைக்கும் ம.அ.பி.


நமது பூமியும் அதன் சூழலும் நாம், நமது பெற்றோரிடம் இருந்து பெற்ற சொத்தல்ல. இவை உண்மையில் நாம் நம் பிள்ளைகளிடம் இருந்து கடனாகப் பெற்றவை என்றே கருத வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திச் சுடர்

* ஏப்பிரல் 22ஆம் திகதி மண்காப்புத் தினம் - இத் தினத்தை நினைவுகூரும் முகமாகக் காங்கேயனோடைக் கிராமத்தில் "மன்று" 500 கண்ணாக்கன்றுகளை கிராம மக்களின் முழு ஒத்துழைப்புடன் வாவிக்கரையோரத்தில் நாட்டியது. காட்டிலாகா உத்தியோகத்தர்கள், மண்முனைப்பற்று சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவகர்கள் மற்றும் கிராம முக்கியஸ்தர்கள் கலந்து சிறப்பித்தனர்.

**********

* இறால், மீன் இனங்கள் தற்பொழுது அருகி வருகின்றன. வாவிக்கரையோரங்களில் இருந்த கண்டல், சிறு கண்டல், கண்ணா போன்ற சதுப்பு நிலத் தாவரங்கள் சூறாவளியினாலும், மனிதனாலும் அழிக்கப்பட்டதனால் ஏற்பட்ட பாரிய விளைவுதான் இது என்பது முதிய மீனவர்களின் கூற்று. இது ஓரளவிற்கு உண்மை என்று கிழக்குப் பல்கலைக் கழக ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

**********

* புளி, நாவல், வேம்பு, மலை வேம்பு, இலுப்பை, இலந்தை போன்ற பயனுள்ள பழ மரங்களின் விதைகளைச் சேகரித்து பருவ மழையின் பொழுது உபயோகிக்கப்படாமல் தரிசாக விடப்பட்டிருக்கும் நிலங்களில் விதைத்திடும் திட்டம் இவ் வருடம் "மன்று"வினால் நடைமுறைப்படுத்தப்படவிருக்கின்றது. இத் திட்டத்திற்கு சகலரினதும் ஒத்துழைப்பைக் கோருகின்றோம்.

**********

* சுற்றுப்புறச் சூழல் சம்பந்தமான கருத்துக்களை பாடசாலை ஆசிரியர்கள், மாணவ மாணவிகள் மத்தியில் பரிமாற்றம் செய்யும் திட்டம் "மன்று"வினால் ஆரம்பிக்கப்படவுள்ளது. கருத்தரங்குகள் ஒழுங்கு செய்ய விரும்பும் பாடசாலை அதிபர்கள் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**********

* "மன்று", மாவட்டச்சூழல் முகவரவையுடனும், கல்வித் திணைக்களத்துடனும் இணைந்து நடாத்தவிருக்கும் "உலக சூழல் தினத்"தினை ஒட்டிய கலாச்சாரப் போட்டிகளின் விண்ணப்பத்திகதி மே 20ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

**********

* "மன்று", மாவட்ட சூழல் முகவரவையுடன் இணைந்து கிராமோதய சபைத் தலைவர்களுக்கு நடாத்திய செயலமர்விலும் கருத்தரங்கிலும் பங்குபற்றியவர்கள் தாங்கள் எடுத்த மேல் நடவடிக்கைகள் பற்றி எங்களுக்கு அறியத் தந்தால் நலம். அவற்றை அறிய ஆவலாய் உள்ளோம்.

**********

உங்கள் கவனத்திற்கு :-

"சூழல் சுடர்" ஒரு மாதாந்த வெளியீடு.
இதனைத் தொடர்ந்து பெற விரும்புவோர்
எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

"சூழல் சுடர்",
மன்று,
43, புகையிரத நிலையக் குறுக்கு வீதி,
மட்டக்களப்பு.

To,
Mr. K. Shanmugam, (Teacher),
Naduvil Jambi Lane,
Vantharumoolai.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org